பதிவு அஞ்சல் ஒப்புகைச் சான்றுடன்

**உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,**

ந.க.எண்.1275/2020/ நாமா — நாள்.08.04 .2021.

ம.வ/ ந.ஊ(நாமா)எண்.43/2021

**உள்ளாட்சியின் பெயர் : நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்**

பொருள்: மனைப்பிரிவு – மாவட்டநகர் ஊரமைப்புஅலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– நாமக்கல் வட்டம் – நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் – காதப்பள்ளி ஊராட்சி/கிராமம் – சர்வே எண்கள். 117/14D,117/14H2–ல் 0.82 ஏக்கர் பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் திரு.ஜி.பூவராகவன், நாமக்கல் அவர்களின் விண்ணப்ப நாள். 30.12.2020, 26.03.2021 மற்றும் 01.04.2021.
2. வேளாண்மை இணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் எண். இ4/13198/2020, நாள்:25.01.2021.
3. 1 எண் இணை சார்பதிவாளர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 761/ஆர்/2021–1, நாள்:05.02.2021.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 14619/88/பிசிசி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 40483/90/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண். 7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 12201/2017/SPI- Cell, நாள். 28.09.2017.
9. அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
11. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(நவ4(3))த் துறை, நாள். 04.05.2017.
12. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(நவ4(3))த் துறை, நாள்.04.06.2004.
13. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்09.12.2020.
14. இவ்வலுவலகக் கடிதம் இதே எண், நாள்.31.12.2020, 12.01.2021 மற்றும் 02.02.2021.

------

**உத்திரவு :**

பார்வை 1–ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 13–ல் சுட்டிய அரசாணையின் படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்டம் அவர்களின் கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை 1–ல் சுட்டிய கடிதம் நாள்.09.02.2021–ல் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக, தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம்,நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், காதப்பள்ளி ஊராட்சி/கிராமம், சர்வே எண்கள்.117/14D,117/14H2–ல் 0.82 ஏக்கர் புன்செய் நிலத்தினை விவசாயமற்ற அபிவிருத்தியாக குடியிருப்பு மனைஉட்பிரிவாக மாற்ற பார்வை 2–ல் கண்ட அறிக்கையில் விவசாயமில்லாத உபயோகத்திற்கு மாற்ற தடையின்மைச் சான்று எனப் பெறப்பட்டதனைத் தொடர்ந்து, அவ்விடத்தில் உத்தேச குடியிருப்பு மனையிட வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனையிட நிபந்தனைகளின் பேரில் ம.வ/ந.ஊ(நாமா) எண்.43/2021 என எண்ணிட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது. மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தபட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. “நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல்வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனையிட வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

   “ The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of if only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority ".

3. பார்வை 10–ல் கண்ட அரசாணையின் படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின்பேரில் இத்தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

4. பிரஸ்தாப கட்டிட உத்தேசம் குறித்து நீதி மன்ற வழக்கு நிலுவை ஏதேனும் அறியப்படின் உத்தேசத்திற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. நடைமுறையிலுள்ள பார்வை 2 மற்றும் 12 கண்ட கடிதம், அரசாணை மற்றும் விதிகளின்படி உரிய கட்டணத்தினை மனுதாரரிடமிருந்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி வசூல் செய்த பின்னரே மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.மேலும், பார்வை 11–ல் சுட்டிய அரசாணையின்படி மனைப்பிரிவிற்கு 3% Market Value கட்டணத்தினை மனுதாரரிடமிருந்து உரிய கணக்குத் தலைப்பில் வசூல் செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

## பொது நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 79 (சட்டம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49அல்லது 64(1)–ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
2. நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக உதவி இயக்குநர், திட்ட அனுமதி அளித்த பிறகு (1)திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, (2)சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.
3. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனையிட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.
4. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிட அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
5. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.
6. பார்வை 10 மற்றும் 13–ல் உள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உள்ளாட்சியால் தானமாக தானபத்திரம் மூலம் மனுதாரர்களிடம் பெறப்பட்ட சாலைகளில் குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, தெருவிளக்குகள் போன்ற வசதிகளை மனுதாரர் செய்த பிறகே உள்ளாட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்றும் அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி தலைவர்/வட்டார வளர்ச்சி அலுவலர், காதப்பள்ளி ஊராட்சி, நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக தலைவர்/வட்டார வளர்ச்சி அலுவலர், காதப்பள்ளி ஊராட்சி, நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தலைவர்/வட்டார வளர்ச்சி அலுவலர், காதப்பள்ளி ஊராட்சி, நாமக்கல் ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

முத்திரையிட்ட வரைபடம் – 2

நிபந்தனைப்படிவம் –2

உதவியிக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

**பெறுநர்**

தலைவர்,
காதப்பள்ளி ஊராட்சி,
நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

**நகல்**

1. **வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்,**
**நாமக்கல் வட்டம்,**
**நாமக்கல் மாவட்டம்.**

2. திரு.ஜி.பூவராகவன்,
க.எண்.264/2, திருச்செங்கோடு ரோடு,
**நாமக்கல் டவுன்,**
நாமக்கல் வட்டம்,
**நாமக்கல் மாவட்டம்.**

3. Tamil Nadu Real Estate Regulatory Authority
(TNRERA),
No:1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

4. இருப்புக் கோப்பு.

**நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்,**
**காதப்பள்ளி ஊராட்சி மன்றம், தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திருமதி.பி.சுதா அவர்கள்,**

ஊ.ம.எண்.03/2021 — 13.08.2021

பொருள் : **மனை உட்பிரிவு-நாமக்கல் மாவட்டம்-நாமக்கல் வட்டம்-நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்-காதப்பள்ளி ஊராட்சி-காதப்பள்ளி கிராமம் ச.எண்கள். 117/14D, 117/14H2-ல் 0.82 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடுதல்-தொடர்பாக.**

பார்வை :

1. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)) த்துறை நாள் : 04.05.2017
2. அரசாணை எண்.18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019
3. அரசாணை எண்.138. வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)) த்துறை நாள் : 04.06.2004
4. உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், அவர்களின் ந.க.எண். 1275/2020/நாமா, ம.வ/ந.ஊ/(நாமா) எண். 43/2021 நாள் : 08.04.2021
5. திரு.ஜி.பூவராகவன், க.எண்.264/2, திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் டவுன், நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் விண்ணப்பம் நாள் : 10.08.2021

ஊராட்சி மன்றம் நாமக்கல் ஒன்றியம் நாமக்கல் Dt காதப்பள்ளி அஞ்சல்

உத்திரவு :

பார்வை 4 ல் கண்ட உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அனுமதி கடிதத்தின் படி, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டாரத்திற்கு உட்பட்ட காதப்பள்ளி ஊராட்சியில் கிராம சர்வே எண். 117/14D, 117/14H2-ல் 0.82 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு நாமக்கல் மாவட்ட, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின் படி குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான ம.வ/ந.ஊ(நாமா) எண். 43/2021 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் வட்டாரம், காதப்பள்ளி ஊராட்சி கிராம ச.எண்கள். 117/14D, 117/14H2-ல் 0.82 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலமானது நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உத்தேச மனை உட்பிரிவிற்கான பரப்பு :**

0.82 ஏக்கர் (அ) 3318.39 சதுர மீட்டர்

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு அமையும் (ஸ்ரீ பெருமாள் நகர்) இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை-3 ல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்க்கெட் வால்யூம், கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததின் படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

**மனையிட ஒப்புதல் கட்டணம் = 3318.39 ச.மீ (0.82 ஏக்கர்) ஒரு ச.மீட்டருக்கு ரூ.60 வீதம்**
**3318.39X60X3/100 = 5973/- = 6,000/-**

| | |
|---|---|
| 0217 – Urban Development – 60 Other Urban Development Scheme – 800 other Receipts – AS Receipt under land use conversation – 27 Non Taxation fees 09 Collections.<br>D.P.C.-0217-60-800-As-22709 | தலைப்பில் அரசு மூலம் சலான் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>சலான் எண் : 20210907451917<br>SBI Bank, Namakkal – Rs.6,000/-<br>நாள் : 07.09.2021 |

தற்சமயம், மேற்படி நாமக்கல் வட்டாரம், காதப்பள்ளி ஊராட்சி, காதப்பள்ளி கிராமம் ச.எண். 117/14D, 117/14H2-ல் 0.82 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள இடத்திற்கு காதப்பள்ளி ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள் :

1. பார்வை 4 ல் காணும் உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.

2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.

3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.

4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால், உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.

5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலில், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.

6. பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

7. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த/சாதார மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.

8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும் பத்திரபதிவு செய்யும்போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

P. [signature] 13.8.2021
தலைவர்
தலைவர், காதப்பள்ளி ஊராட்சி
காதப்பள்ளி ஊராட்சி, நாமக்கல் வட்டம்.

பெறுதல் :

திரு. ஜி. பூவராகவன்,
க.எண் : 264/2, திருச்செங்கோடு ரோடு,
நாமக்கல் டவுன்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :

1. உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களுக்கு,
2. சார்பதிவாளர், JOINT-I அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) நாமக்கல் வட்டம்.